# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.
## STC.No. 191 /2018

2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ம் நாள் திங்கள் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி–02, திரு.விஜயகுமார் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.லதா, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.விஜயகுமார் | வயது | : | |
| த.பெ/ க.பெ. | : | | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | PW02 |
| வட்டம் | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |

**( எதிரி ஆஜர் இல்லை. அவர் தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஜெயங்கொண்டம் இந்தியன் வங்கியில் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். நான் சாட்சி சொல்வதற்காக, நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்ததன் பேரில்தான், இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி சொல்ல வந்துள்ளேன். இந்த வழக்கின் எதிரியான மேலக்குடியிருப்பு கிராமத்தை சேர்ந்த ஜெயபால் மகன் மாரியப்பன் எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அவரது வங்கி கணக்கு எண் 6124129657 ஆகும். எனது வங்கியில் எதிரியின் சேமிப்பு கணக்கிற்கு காசோலை உள்ளது. இந்த வழக்கின் காசோலை எண் 483474 எதிரிக்கு எங்கள் வங்கியில் இருந்து வழங்கியதுதான். **(காசோலை எண் 483474 கொண்ட காசோலையின் அசல் ம.த.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது).** அந்த காசோலை புத்தகமானது வரிசை எண் 483461ல் இருந்து 483480 வரையான 20 எண்ணிக்கைகள் கொண்ட காசோலை புத்தகம் ஆகும். இந்த வழக்கின் காசோலையானது எங்கள் வங்கிக்கு 12.10.2017ம் வருடம் கலெக்சனுக்காக வந்தது. வழக்கின் காசோலையானது எதிரியின் வங்கி கணக்கில் பணம் இல்லாத காரணத்தினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. **(எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லாமல் காசோலை திரும்பியதற்கு Return**

**Charge பிடிக்கப்பட்டதற்கான எதிரியின் வங்கி கணக்கின் ஒரு வாரத்திற்கான Statement of Account ஆனது ம.த.சாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

/உண்மை நகல்/

ஒம்/–இரா.இராஜசேகரன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.